10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 158 ஞாயிற்றுக்கிழமை ஒக்ரோபர் 29 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## கட்டலோனியா பிரகடனத்துக்கு கடும் கண்டனம்

கொழும்பு, ஒக்.29

ஸ்பெயினில் இருந்து பிரிந்து தன்னை தனிநாடாக அறிவித்த கட்டலோனியாவின் செயலுக்கு இலங்கை அரசு கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்ட விசேட அறிக்கையிலேயே இந்தக் கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை - ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கிடையே நீண்டகாலமாக நல்லுறவு நிலவிவருகின்றது. ஐரோப்பிய சங்கத்திலும் முக்கிய ஒரு உறுப்பு நாடாக ஸ்பெயின் விளங்குகிறது.

இலங்கை அரசாங்கம் எந்தவித பாகுபாடும் இன்றி ஸ்பெயின் அரசின் இறைமையின் இருப்புக்கு ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றது. அத்துடன், கட்டலோனியா ஸ்பெயினின் முக்கிய ஒரு பிராந்தியம் என்றே கருதுகிறது - என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)


## வாகனங்கள் விலை குறையும்?

கொழும்பு, ஒக்.29

1000 சி.சி. இற்குக் குறைந்த வாகனங்கள் 2018 இல் விலை குறையும் என நிதி அமைச்சருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவால் நவம்பர் 9 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதன்போது 1000 சி.சி. இற்குக் குறைவான வாகனங்களுக்கான வரியில் பெரும்பங்கு குறைக்கப்படவுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் 5 அத்தியாவசியப் பொருள்களின் விலையும் குறையும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)





## அரியாலை துப்பாக்கிச் சூடு:

# கொலை சூத்திரதாரிகள் பாவித்த வாகனங்கள் சி.சி.ரி.வியில் சிக்கின

யாழ்ப்பாணம், ஒக்.29

அரியாலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் சூத்திரதாரிகள் பயணித்ததாக நம்பப்படும் ஓட்டோ, மோட்டார் சைக்கிள் என்பன சி.சி.ரி.வி. கமெராவில் சிக்கிய காணொலியை பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

அரியாலை மணியந்தோட்டத்தில் கடந்த 22 ஆம் திகதி நடத்தப்பட்ட துப்பாக்கச் சூட்டில் டொன் பொஸ்கோ ரிக்மன் (வயது 24) என்பவர் பலியானார்.

இந்தச் சம்பவம் குறித்து கொழும்பில் இருந்து வந்துள்ள விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட வீதியின் வீடு ஒன்றில் பொருத்தப்பட்ட சி.சி.ரி.வி. கமெராவை பொலிஸார் ஆய்வுக்கு உட்படுத்தினர்.

இதன்போது சம்பவம் இடம்பெற்ற நாளில் சந்தேகத்துக்கு இடமான முறையில் ஓட்டோவும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நடமாடியதை பொலிஸார் உறுதி 06

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல்:

# சுதந்திரக் கட்சியுடன் மகிந்த அணி இணையும்



கொழும்பு, ஒக்ரோபர் 29

"உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மகிந்த ராஜபக்ச ஆதரவு அணியான ஒன்றிணைந்த எதிர்க்கட்சியும் இணைந்து எதிர்கொள்ளும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன"

–இவ்வாறு கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று, வட்டகொட, வெலிகல வாவியில் மீன் குஞ்சுகளை விடும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், புதிய அரசியலமைப்பில் நாட்டைப் பிளவுபடுத்தும் எந்தத் திட்டமும் இல்லை. வடக்கு, கிழக்கை இணைத்தல், பௌத்த சமயத்தை முன்னிலைப்படுத்தல் என எந்த நடவடிக்கையும் இல்லை.

நாட்டின் மக்கள் அனைவரும் ஒருமித்த சமாதான முறையை முன்னெடுக்க வேண்டும். இதற்கமைவாகவே புதிய அரசியலமைப்பு இருக்க வேண்டும். இல்லையேல் அதற்கு எதிராக வாக்களிக்கவும் நாம் தயார். 1983 ஆம் 06

## நாடாளுமன்றத்துக்கு ஒன்றல்ல 100 குண்டுகள் போட வேண்டும்

கொழும்பு, ஒக்.29

நாடாளுமன்றத்துக்கு ஒன்றல்ல நூறு குண்டுகள் போட வேண்டும் எனத் தெரிவித்திருக்கிறார் கெஹலிய ரம்புக்வெல.

"புதிய அரசியலமைப்பின் மூலம் நாடாளுமன்றத்துக்கான அதிகாரங்கள் இல்லாமல் செய்யப்பட்டு பெயரளவுக்கே இருக்கப் போகிறது. எனவே இந்த நாடாளுமன்றத்துக்கு ஒன்றல்ல நூறு குண்டுகள் போடப்பட வேண்டும்."

கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகமவின் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச நாடாளுமன்றத்துக்கு குண்டு போட வேண்டும் எனக் கருத்து வெளியிட்டார். இதற்கெதிராக அவருக்கு விசாரணை நடக்கும் சமயத்திலேயே கெஹலிய ரம்புக்வெல இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## இராணுவ வாகனம் மோதி இளைஞன் ஸ்தலத்தில் பலி

யாழ்ப்பாணம், ஒக்.29

மோட்டார் சைக்கிளின் பின்புறமாக வந்த இராணுவ வாகனம் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

இணுவில் சந்திக்கு அண்மையாக நேற்று மாலை இடம்பெற்ற இந்த விபத்தில், வட்டுக்கோட்டை ஞானசம்பந்தர் வீதியைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் விஜிதரன் என்பவரே பலியானார்.

கே.கே.எஸ். வீதியில் மருதனார்மடம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞரை, பின்புறமாக வந்த இராணுவ வாகனம் மோதித் தள்ளியது.

இதில், இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனத் தெரிய வருகின்றது. மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ)

# கண்ணில் கிருமித் தாக்கம்: பார்வை இழந்தார் ஒருவர்

யாழ்ப்பாணம், ஒக்.29

தனியார் வைத்தியசாலையில் செய்யப்பட்ட சத்திர சிகிச்சையில் ஏற்பட்ட பாதிப்பால் ஒருவர் தனது பார்வையை முற்றாக இழந்தார். இந்நிலையில் அவரின் கண்ணை முற்றாக அகற்ற வேண்டி ஏற்படும் என கொழும்பு வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

கடந்த சனிக்கிழமை (21) யாழ்ப்பாணத்தின் பிரபல தனியார் வைத்தியசாலை ஒன்றில் 10 பேருக்கு கண்ணில் "கற்றாக்" நோய்க்காக சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதில் 9 பேர் கண்ணில் கிருமி தொற்றால் பாதிக்கப்பட்டனர். பின்னர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட அவர்களில் 5பேர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

# தமிழக மீனவர்கள் 5 பேர் கைது



இராமேஸ்வரம், ஒக்.29

கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் 5 பேர் நேற்று அதிகாலை இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கச்சதீவு அருகே அத்தானாஸ் என்பவரின் விசைப் படகு மீன்பிடியில் ஈடுபட்டிருந்தாகக் கூறப்பட்டுள்ளது. அதன் போது அங்கு வந்த இலங்கைக் கடற்படை, எல்லையைத் தாண்டி வந்ததாக கூறி படகைக் கைப்பற்றியதோடு 5 மீனவர்களையும் கைது செய்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் தலைமன்னாருக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். (உ)



# வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

திருகோணமலை, ஒக்.29

வடக்கு, கிழக்கு இணைப்பு மற்றும் புதிய அரசியல் அமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலை நகர் மணிக்கூடு கோபரச் சந்தியில் நேற்று ஆர்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. தேசிய விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைப்பு, வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு எதிராகவும் மற்றும் எதிர்கட்சித் தலைவர், பிரதமர் ஆகியோருக்கு எதிராகவும் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷங்களை எழுப்பினர். (உ)

# கடற்படைக்கு புதிய பேச்சாளர்



கடற்படையின்ட புதிய பேச்சாளராகக் கமாண்டர் தினேஸ் பண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.

கடற்படை ஊடகப்பிரிவு இந்த நியமனம் குறித்து அறிவித்துள்ளது. கடற்படைப் பேச்சாளராகக் கடமையாற்றி வந்த கமாண்டர் லங்கானாத் திசாநாயக்க, பதவி உயர்வு பெற்றுக் கொண்டதன் காரணமாக புதிய நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு மாணவர் படை உத்தியோகத்தராக தினேஸ் பண்டார கடற்படையில் இணைந்து கொண்டுள்ளார். இந்தியா, அமெரிக்கா மற்றும் சீனாவில் தினேஸ் பண்டார பயிற்சி நெறிகளை பூர்த்தி செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# தனியார் வைத்தியசாலையின் அறுவைச் சிகிச்சைப் பிரிவுக்கு சீல் வைப்பு!

வடமாகாண சுகாதார அமைச்சரின் உத்தரவுக்கு அமைவாக யாழ். பிரபல தனியார் வைத்தியசாலையின் அறுவைச் சிகிச்சைப் பிரிவுகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலனின் உத்தரவுக்கு அமைவாக யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பணிமனை அதிகாரிகளினால் நேற்று முன்தினம் சீல் வைத்து மூடப்பட்டுள்ளது.

அண்மையில் குறித்த வைத்தியசாலையில் கண்புரை சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட 10 நோயாளர்கள் திடீர் கிருமி தொற்றுக்கு உள்ளான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய கண் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இந்த நிலையில் குறித்த தனியார் வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவில் நோய்த்தொற்று ஏற்பட்டமைக்கான காரணத்தை அறிந்து கொள்ள விசேட நிபுனர் ஒழு ஒன்று கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளது. இவ்விடயம் தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ)

# நான் ஒரு தமிழன்



நான் ஐக்கியத் தேசியக் கட்சியைச் சேர்ந்தவன் என்று சொல்வதை விட தமிழன் என்று சொல்வதிலேயே பெருமை கொள்கின்றேன் என மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட மட்டக்களப்புக் கல்லடி உப்போடை விவேகானந்தா மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. பாடசாலையின் அதிபர் திலகவதி ஹரிதாஸ் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (உ)

# அமெரிக்க கப்பல் பார்க்க அமைச்சர்கள் ஓட்டம்



கொழும்பு, ஒக். 29

அமெரிக்கக் கடற்படையின் யு.எஸ்.எஸ். நிமிட்ஸ் விமானந்தாங்கி போர்க்கப்பலுக்கு இலங்கை அமைச்சர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று முன்தினம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்கக் கடற்படையின் 11 ஆவது விமானந்தாங்கி தாக்குதல் குழுவைச் சேர்ந்த, யுஎஸ்எஸ் நிமிட்ஸ் விமானந்தாங்கி கப்பல் தலைமையில், அதிவேகப் போர்க்கப்பலான யுஎஸ்எஸ் பிரின்சிரோன், நாசகாரிக் கப்பல்களான, யு.எஸ்.எஸ். ஹவார்ட், யு.எஸ்.எஸ். சூப், யுஎஸ்எஸ் பின்க்னி, யுஎஸ்எஸ் கிட் ஆகியன நேற்று கொழும்பு வந்தன.

இவை கொழும்பு நோக்கி வந்து கொண்டிருக்கும் நிலையில், கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கிய, அமெரிக்க கடற்படையின் சீ ஹோக் ஹெலிகொப்டர் மூலம், இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப், அமைச்சர் மகிந்த சமரசிங்க, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, வெளிவிவகாரச் செயலர் பிரசாத் காரியவசம், கூட்டுப்படைத் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க உள்ளிட்ட பாதுகாப்பு அதிகாரிகளும், சில ஊடகவியலாளர்களுமே இவ்வாறு யுஎஸ்எஸ் நிமிட்ஸ் விமானந்தாங்கி போர்க்கப்பலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (உ)

# இன, மதவாத அடிப்படையில் கட்சிகள் செயற்படக் கூடாது

இனவாத அல்லது மதவாத அடிப்படையில் அரசியல் கட்சிகள் அடையாளப் படுத்தப்படக் கூடாது என வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

அண்மையில் கட்டுகுருந்தவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய அவர், இலங்கையில் பல அரசியல் கட்சிகள் இனவாத மதவாத அடிப்படையில் செயற்பட்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். நாட்டைத் துண்டாடி இனவாத மதவாத அடிப்படையில் பிரிக்கப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று குறிப்பிட்ட அவர் சிங்கள, முஸ்லிம் மற்றும் தமிழ் மாணவர்கள் ஒரே இடத்தில் கல்வி கற்கக்கூடிய பின்னணி உருவாக்கப்பட வேண்டியது அவசியமானது எனவும் குறிப்பிட்டுள்ளார்.(உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி Ethiroli

ஞாயிறு, 29 ஒக்ரோபர் 2017 ethirolijaffna@gmail.com

# தென்னையில் தேள் கொட்ட....

ஸ்பெயினில் இருந்து பிரிந்து சென்று தனிநாடாகக் கட்டலோனியா பிரகடனம் செய்திருக்கிறது. ஏற்கனவே மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பில், கட்டலோனியா தனிநாடாகச் செல்வதற்கான அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பின்னரும் கட்டலோனியாவைப் பிரிந்து செல்லவிடாமல் பல இராஜதந்திர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஏனெனில் கட்டலோனியாவின் சுதந்திரம், பல வழிகளிலும் ஸ்பெயினில் தாக்கத்தை உண்டுபண்ணும். ஆனால் கட்டலோனியாவுக்கோ பல நன்மைகள் கிடைக்கும். இந்த லாப நட்டக் கணக்கின் அடிப்படையிலே பல விட்டுக்கொடுப்புகளுக்கு ஸ்பெயின் தயாராக இருந்தபோதும், கட்டலோனியத் தலைவர்கள் கடைசி வரை தம் நிலையில் இருந்து தளரவில்லை. மக்கள் ஆணை பலமாகக் கிடைத்ததால், அவர்கள் தம் பிடியில் உறுதியாக இருந்து, ஸ்பெயினின் விருப்பத்துக்கு மாறாக தனிநாட்டுப் பிரகடனத்தையும் செய்துவிட்டனர்.

இந்த தனிநாட்டுப் பிரகடனம் ஸ்பெயினுக்கு வேண்டுமானால் கோபத்தை வரவழைத்திருப்பதில் ஒரு நியாயம் உண்டு. பலவந்தமாகத் தன்னோடு இணைத்து வைத்திருந்த கட்டலோனியாவால் கிடைத்து வந்த அத்தனை லாபங்களும் ஒரேநாளில் இல்லாமல் போவதை எப்படி அந்த நாட்டால் தாங்கிக் கொள்ளமுடியும்.

ஆனால் எங்கேயோ இருக்கும் இலங்கைக்கு கட்டலோனியா தனிநாடானதால் கோபம் வருவதற்கு எந்த முகாந்திரமும் இல்லையே. உலகில் எத்தனையோ கொடுமைகள் நடக்கும் போதெல்லாம் எல்லோருக்கும் நல்ல பிள்ளையாக நடந்து, அவற்றைக் கண்டுகொள்ளாமலே நடக்கும் இலங்கை, கட்டலோனியா தனிநாடானதும் பதறித் துடித்து, சுடச்சுட கண்டன அறிக்கையும் விட்டிருக்கிறது என்றால், ஏதோ ஒரு மர்மம் இருக்கத் தானே வேண்டும்.

ஆயினும் அந்த மர்மம் அப்படியொன்றும் தங்கமலை ரகசியமல்ல, உள்ளங்கை நெல்லிக்கனிதான். கட்டலோனியாவைப் போல, தமிழர்களும் தங்களுக்கான தாயகத்துக்காக வாக்கெடுப்பு நடத்தி, அதை அடிப்படையாகக் கொண்டு பிரிந்து சென்றுவிடுமோ என்ற மெல்லிய அச்சம் இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. அதற்கான சாத்தியங்கள் பெரும்பாலும் இல்லையென்ற போதும், கடலோனியாவைப் போல அரசோடு எவ்வித சமரசமும் இன்றி தேசத்துக்காகக் குரல் கொடுக்கக் கூடிய உறுதியான அரசியல் தலைமைகள் தற்போது இல்லையென்ற போதும், தமிழ் மக்களின் அடிமனதிலே 'தங்களுக்கு என்றொரு தனித் தேசம்' எனும் கனவு எப்போதும் இருந்து கொண்டேயிருக்கிறது எனப் பேரினவாதிகளுக்கு நன்கு தெரியும்.

போரிலே தோற்றதால் தனித்தேசக் கனவு கலைந்திருக்கக்கூடும் என்ற அரசின் நப்பாசைக்கு அடி கொடுப்பது போல கடந்த இரு வருடங்களாக சில சம்பவங்கள் நடந்தேறியுள்ளன. மாவீரர் நாள், முள்ளிவாய்க்கால் படுகொலை போன்ற முக்கியமான தினங்களை தமிழ் மக்கள் தற்போது பகிரங்கமாகவே முன்னெடுக்கத் தொடங்கி விட்டார்கள். அதைத் தடுக்க நினைத்தால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படலாமென எண்ணி, கண்டும் காணாதது போல இருந்துவிட்டது அரசு. ஆனால் அப்படியான தமிழ் மக்களின் அடிமன அபிலாஷைகள் எல்லாமே தனித்தேசம் பற்றியதாகவே இருக்கின்றன என்றும் அவர்களுக்குத் தெரியும். இறுதிப்போரில் செய்த கொடுமைகள் இலங்கையை வெளிப்படையாக தமிழர்களுக்கு எதிராக எதுவும் செய்யமுடியாத நிலைக்கு கொண்டுவந்து விட்டுள்ளன. அதனால் மறைமுகமாகவே இலங்கை காய்களை நகர்த்தும். அப்படி கஷ்டப்பட்டு தமிழர்களின் தனிநாட்டுக் கனவை கலைத்து வரும் சூழலில், எங்கேயோ உள்ள கட்டலோனியா தனியாகப் பிரிந்து, " இப்படி நீங்களும் பிரியலாம்" எனத் தமிழர்களுக்கு ஒரு நம்பிக்கைப் புள்ளியைக் கொடுத்தால் கடுப்பு வரத்தானே செய்யும். அதனால் தான் ஸ்பெயின் என்ற தென்னையில் கொட்டிய கட்டலோனியத் தேளால் இலங்கையெனும் பனைமரத்துக்கு நெறி கட்டி, அறிக்கையூடாக அனலைக் கக்கியிருக்கிறது போலும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# இருவேறு விபத்தில் இருவர் பலி!

கொழும்பு, ஒக்.29

இருவேறு விபத்துக்களின்போது நேற்று இருவர் உயிரிழந்துள்ளனர். குருணாகல் பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தொன்றில்இளைஞர்ஒருவர்உயிரிழந்துள்ளார். பஸ் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கல்பொல, இலுக்ஹேன பிரதேசத்தில் வசிக்கும் 22 வயதுடைய இளைஞர் ஒருவரே உயிரிழந்துள்ளார். இது தவிர பெல்மதுல்ல பிரதேசத்தில் வான் ஒன்று அருகில் நிறுத்தப்பட்டிருந்த லொறியுடன் மோதி ஏற்பட்ட விபத்தில் வானின் சாரதி உயிரிழந்துள்ளார். மாத்தறை, பிரிதி மாவத்தையை சேர்ந்த 62 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பில் லொறியின் சாரதியை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (உ)

# நல்லாட்சியின் சாதனைகள் ரணில் மக்களுக்கு விளக்கம்

கொழும்பு, ஒக். 29

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டு வருட சாதனைகள் குறித்து நாட்டு மக்களுக்கும், ஊடகங்களுக்கும் விளக்கமளிக்கவுள்ளார். கடந்த 2015 ஓகஸ்டில் பதவிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் இரண்டு வருட ஆட்சிக்காலத்தை பூர்த்தி செய்துள்ளது. இந்த காலப்பகுதியில் அரசாங்கத்தின் முக்கிய அடைவுகள் மற்றும் அரசியல், பொருளாதார ரீதியான சாதனைகள் குறித்து நாட்டு மக்களுக்கும், ஊடகங்களுக்கும் விளக்கமளிக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். இது தொடர்பான ஊடக வியலாளர் சந்திப்பு நாளை ஐ.தே.க தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# கமக்காரர் அமைப்புக்கள் கலந்துரையாடல்



வவுனியா, ஒக்.29

வவுனியா மாவட்ட கமக்காரர் அமைப்புக்களை வலுப்படுத்தலும், எதிர்காலத் திட்டங்களை இனங் காணலும் எனும் தலைப்பில் கமக்கார அமைப்பினருக்கான விசேட நிகழ்வு ஒன்று நேற்று நடைபெற்றது. வவுனியா கலாசார மண்டபத்தில் வவுனியா மாவட்ட கமக்காரர் ஒழுங்கமைப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் கமக்கார அமைப்புக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், எதிர்கால திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. மேலும் எதிர்கால திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளும் இந்நிகழ்வில் முன்வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் இ.விஜயகுமார், விவசாய விரிவாக்கத்தின் உதவி ஆணையாளர் மற்றும் கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (உ)

# பிணைமுறி வழக்கிலிருந்து நீதிபதி விலகல்

கொழும்பு, ஒக்.29

பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பான வழக்கில் வங்கி ஊழியர்களின் அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணையிலிருந்து நீதிபதியொருவர் விலகிக் கொண்டுள்ளார். மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி ஆணைக்குழு அது தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களுக்கு எதிராக வழக்குத் தொடருமாறு பரிந்துரைத்துள்ளது. இந்த நிலையில் குறித்த விவகாரம் தொடர்பான விசாரணைகளில் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து நீதிபதிகளாக பதவியுயர்வு பெற்ற நீதிபதிகளை ஈடுபடுத்தக் கூடாது என்று மத்திய வங்கியின் இரண்டு அதிகாரிகள் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளனர். இந்த மனுவுக்கு மதிப்பளிக்கும் வகையில் குறித்த விசாரணை அமர்வில் இருந்து நீதிபதி ஜயவர்த்தன என்பவர் விலகிக் கொண்டுள்ளார். (உ)

# வவுனியாவில் துப்பாக்கி ரவைகள் மீட்பு

வவுனியா, ஒக்.29

வவுனியா - மருதநிலம், கல்நாட்டினகுளம் பகுதியில் நேற்று பொலிஸாரால் வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. அவை விடுதலைப் புலிகளினுடையதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. குறித்த பகுதியில் நேற்றுக் காலை 11மணியளவில் பூங்காவிற்கு வேலைக்கு சென்ற நபர் ஒருவர் நிலத்தினை கொத்தியுள்ளார். இதன்போது துப்பாக்கி ரவைகள் இருப்பதனை அவதானித்து சிதம்பரபுரம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சிதம்பரபுரம் மற்றும் வவுனியா பொலிஸார் விரைந்துள்ளனர். இதன் போது, மீட்கப்பட்ட 250 இற்கும் மேற்பட்ட துப்பாக்கி ரவைகள் ரிஆப்பினால் சுத்தப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன. (உ)



# வாவி புனரமைப்பு



தலவக்கலை, ஒக்.29

தலவாக்கலை வட்டகொடை - மடக்கும்புர பிரதேசத்தில் மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் இருந்த வெலிகல வாவி மத்திய மாகாண விவசாயத்துறை மற்றும் நன்னீர் மீன்பிடித்துறை அமைச்சின் முயற்சியால் புனரமைக்கப்பட்டுள்ளது. குறித்த வாவியில் ஆயிரக்கணக்கான மீன் குஞ்சுகள் இடும் வைபவம் நேற்று நடைபெற்றது. மத்திய மாகாண மீன்பிடித்துறை விவசாயம் மற்றும் இந்து கலாச்சார தமிழ் கல்வி அமைச்சர் மருதபாண்டி ரமேஷ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொது செயலாளரும், விவசாயத்துறை அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (உ)

## இன்று நாளும் கோளும்

29.10.2017 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 12 ஆம் நாள்

நவமி பகல் 03. 07 வரை | அவிட்டம் மாலை 04.22 மணி வரை | மரணயோகம்

இராகுகாலம் 04.30 - 06.00 | சுபநேரம் 03.15- 04.15 | எமகண்டம் 12.00 - 01.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விருப்பம் | ஜெயம் | நிறைவு | சாந்தம் | பிரயாணம் | அமைதி | பரிசு | முயற்சி | பாராட்டு | ஆர்வம் | உதவி | பக்தி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞனின் சடலம் மீட்பு

வவுனியா உக்களான்குளம் பிரதேசத்தில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். உக்குளாங்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய நாகலிங்கம் ரகுகரன் என்ற இளைஞரின் சடலமே நேற்று இவ்வாறு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இது தற்கொலையாக இருக்கலாம் என்று சந்தேகிப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்த இளைஞரின் சடலம் தற்போது பிரேத பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (உ)

## முன்னாள் போராளிகள் விபரம் சேகரிப்பு

வவுனியா கனகராஜன்குளம் பகுதியிலுள்ள புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளின் விபரங்களைப் பெறும் நடவடிக்கையை வவுனியாப் பொலிஸார் மேற்கொண்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2012 அன்று புனர்வாழ்வு அளிக்கப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட முன்னாள் போராளி ஒருவருடைய விபரங்களைப் பெறுவதற்காக நேற்று முன்தினம் முற்பகல் உறவினருக்கு கனகராஜன்குளம் பொலிஸ் நிலையத்திலிருந்து தொலைபேசியில் அழைப்பு எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த முன்னாள் போராளி தற்போது எங்கு உள்ளார். என்ன தொழில் புரிகின்றார். திருமணமாகியுள்ளதா? போன்ற விபரங்களை கேட்டுப் பெற்றுள்ளதாக முன்னாள் போராளியின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளின் விபரங்களைப் பொலிஸார் சந்தேகக் கண்ணோட்டத்துடன் விபரங்களைப் பெற்று வருவது எமக்கு தர்ம சங்கடங்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் முன்னாள் போராளியின் உறவினர்கள் தெரிவித்தனர். (உ)



## பொறுப்பில்லாதது, நாங்கள்

நேற்றைக்கு இராத்திரி கனகற்றை கடை வாய்ப்பனைக் கனவிலை கண்டனான். அதாலை விடியவே கனகற்றை தேத்தண்ணிக் கடைப் பக்கம் போட்டன். அதிலை கொஞ்சப் பேர் பேப்பரைக் கையுக்கை வைச்சுக் கொண்டு கதைக்கிற கதையளைப் பாத்தால்... ஏதொ பெரிய நீதவான்களைப் போல. பேப்பரைப் படிக்கிறது பிறகு அப்பிடி எண்ணுறது.. பிறகு இப்பிடி எண்ணுறது.. அவையளைப் பாத்தால் சிரிப்புத்தான் வந்திது.

கதைக்கிறதை ஞாயமாக் கதைக்க வேணும். ஒராக்களைப் பற்றி அல்லது அவையின்ரை பிரச்சினையளைப் பற்றிக் கதைக்கேக்கை முதலிலை நாக்கை நேரா வைச்சுக் கொள்ள வேணும். அதுக்கு முன்னம் அவையின்ரை பிரச்சினையை அவையின்ரை நிலைமையிலை இருந்து பாக்கவேணும். தனக்குத் தனக்கெண்டு வந்தால்தான் தெரியும். சும்மா வாய்க்கு வந்தமாதிரிக் கதைக்கக்குடாது. பிறகு நான் முருங்கையிலை ஏறினனோ! இறங்கன்.

உங்கை அரியாலையிலை நடந்த விசியத்தைத்தான் சொல்லுறன். அப்பவும் அவளையும், பிள்ளையளையும் கவனமாப் பாக்கச் சொல்லித்தான் ஆஸ்பத்திரியிலை சொல்லி விட்டிருக்கினம்.

'அவள் செய்தது பிழை, அப்பிடிச் செய்திருக்கலாம். இப்பிடி நடந்திருக்கலாம். மற்றவையிட்டை அட்வைஸ் கேட்டிருக்கலாம். பிள்ளையளை அநாதை மடத்திலை சேத்துப் போட்டு அவள் மட்டும் செத்திருக்கலாம். கடனைத் திருப்பிக் கேட்டு வந்தவையளிட்டை என்னட்டையோ தந்தனியள் எண்டு கேட்டுக் கலைச்சிருக்கலாம்" எண்டு பல கதை.

புருசன் செத்து இப்ப எத்தினை நாளெண்டு கேக்கிறன்? அவன் வைச்சிட்டுப் போன கடன் என்ன கொஞ்சநஞ்சமே? ஒரு கோடிக்குமேலை. அந்தப் பொம்பிளையாலை என்ன செய்யேலும்? அதுகும் பால் குடி மட்டத்திலை மூண்டு கையுக்கை. அதுகளையும் வைச்சுக் கொண்டு அவள் என்னத்தைச் செய்வள்? பொதுவாச் சனத்துக்கு பிரச்சினையிலிருந்து தப்ப உதைவிட என்னத்தைக் காட்டுது ரீவியிலை வாற நாடகங்களும், சினிமாப் படங்களும்..!

சரி ஒரு நியாயத்தைக் கேப்பம்? அவளின்ரை புருசன் செத்தப் பிறகு டீ எஸ் ஒபிஸிலை இருந்து எத்தனை உளவள நல பெண்டுகள் அவளைத் தேடிப் போனனியள்? போய் அவளுக்கு என்ன பிரச்சினை எண்டு பாத்தனியளே? பாத்து அவளின்ரை மனதை ஆத்தி இருக்கலாம். அவளுக்கு வேறை பாதையைக் காட்டியிருக்கலாம். அவையள் போகேல்லை விடுங்கோ. சமூகத்தை ஆத்திரம்...ஊத்திரம், வெண்டிப் பிடுங்கிறம் எண்டு கோஉட்டும் ரையுமா அலையிற என் ஜீ ஒக்கள் என்ன செய்தவை..? எல்லாம் காசைக் கறக்கிற வரைக்குந்தான் எண்டது எங்களுக்கும் தெரியும்....

ஒரு பக்கத்தாலை கடன்காறற்றை தொல்லை. இன்னும் ஒரு பக்கத்தாலை புருசன் இல்லாத கவலை. இதுக்கை அண்டைக்கு அண்டைக்கு காச்சிக் குடிக்கிற செலவுக் கெண்ட கவலை வேறை. அவன் செத்த பிறகு சனத்தின்ரை நாக்கு வழிப்பு எப்பிடி இருந்திருக்கும். அவளை என சும்மா இருக்க விட்டிருப்பியளே? நீங்கள் பெரிய மகான்கள் எண்டெல்லே கதைக்கிறன்.

எங்கடை சனம் என்ன வந்தாலும் மானத்தை அடைவு வைக்க மாட்டினம் எண்டு தெரியாதே?

அப்ப நீங்கள் கேக்கலாம், ஏன் இயக்கத்துக்குத் தொப்பி போட்டிட்டுப் பலதுகள் ஜென்ரில்மேனாத் திரியேல்லையோ எண்டு? அப்பிடி எண்டு ஒண்டிரண்டு மானங்கெட்டதும் எங்களுக்கை இருக்கத்தான் செய்யிது நான் இப்ப அந்த கேவலங்கெட்ட அலங்கோலங்களைக் கதைக்க வரேல்லை. அதெல்லாந் தம்பி 'ரெம்பிறறி" எண்டு அவைக்குத் தெரியாது.

மானமுள்ளவன் சுடு சொல்லைத் தாங்கான் எண்டு அப்பு அடிக்கடி சொல்லுறவஉ. அதாலை அந்தப் பிள்ளை எடுத்த முடிவைச் சரி எண்டு சொல்லேல்லை. இந்த நேரத்திலை இத்தினை தலையிடியையும் மடிக்கை வைச்சுக் கொண்டு அவள் மானம் மரியதையோடை, நிம்மதியாச் சீவிக்க என்ன வழி இருக்கு எண்டு எனக்கொருக்காச் சொல்லுங்கோ. நான் படிக்காத படியால்தான் உற்களிட்டை கேக்கிறன். நீங்கள் நல்லதொரு வழியைக் காட்டினா உப்பிடி இருக்கிற கனபேரைக் காப்பற்றலாம். என்ன கேக்குதே?

- வில்லங்கம் விநாசி

## ஆசிரியர் கௌரவிப்பு விழா



வவுனியா தெற்கு நகரம் 2 இன் முன்பள்ளி ஆசிரியர்களைக் கௌரவிக்கும் விழா நேற்று முருகனூர் சாரதா வித்தியாலயத்தில் காலை 9 மணியளவில் ஆரம்பமாகி சிறப்பாக இடம்பெற்றது.

சாரதா வித்தியாலய அதிபர் திரு. நேசராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும் கௌரவ விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் இ.இந்திரராவும் சிறப்பு விருந்தினர்களாக முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் கோ.தர்மபாலன் வவுனியா தெற்கு கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் எஸ்.அருள்வேல்நாயகி முன்பிள்ளைப் பருவ உத்தியோகத்தர் சுபாகரன் தர்ஷினி கிராமமட்ட அமைப்புக்களின் நிர்வாகிகள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டுள்ளனர். (உ)


## பொலிஸ் அதிகாரிக்கு எதிராக குற்றப்பத்திரம்

ஹம்பாந்தோட்டை பகுதியில் இடம்பெற்ற போராட்டத்தின் போது, நபர் ஒருவரைத் தாக்கிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் துஷார தலுவத்தவுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஆணைக்குழு கூறியுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழுவின் அறிக்கைப்படி இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாஸ குரே கூறியுள்ளார்.

தயாரிக்கப்பட்ட குற்றப்பத்திரிகையை பொலிஸ் ஆணைக்குழுவினால் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பதாக அவர் கூறினார். அதன்பின்னர் அந்தக் குற்றப்பத்திரிகை பொலிஸ்மா அதிபரினால் துஷார தலுவத்தவுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெருமவினால் பொலிஸ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் அந்த விசாரணை நடத்தப்பட்டிருந்தது. (உ)

## மண் சரிவால் வீதி மூடப்பட்டது



தலவாக்கலை நாவலப்பிட்டி கெட்டபுலா கற்குவாரிக்கு அருகாமையில் நேற்று முன்தினம் இரவு மண்சரிவு ஏற்பட்டது. இதன்போது பெருமளவான கற்கள் பிரதான வீதி ஒன்றில் விழுது வீதியை மூடிவிட்டது.

மலைப் பகுதியிலிருந்து நீரும் அப்பகுதியில் விழுந்தோடுவதால் வாகன போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது.

இந்நிலையில் அதனை சீர் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக நாவலப்பிட்டிப் பொலிஸார் தெரிவித்தனர். மத்திய மலைநாட்டுப் பகுதியில் தற்போது மழையுடன் கூடிய காலநிலை காணப்படுவதால் இவ்வீதியின் பல இடங்களில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதுடன் வீதி போக்குவரத்துக்களும் தடைப்பட்டுள்ளன. (உ)

## தனிப் பிராந்தியமாக வடக்கு இயங்குகின்றது

வடக்கில் முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் எதைப் பேசினாலும் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. வடக்கு தனியொரு பிராந்தியமாகச் செயற்பட ஆரம்பித்துள்ளது. - இவ்வாறு பொதுபலசேனா அமைப்பின் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

தற்காலத்தில் இலங்கையில் பல அரசியல் தலைவர்கள் இருக்கின்றார்கள். எந்தவொரு நாட்டுக்கோ அல்லது நிறுவனத்துக்கோ ஒழுங்கான தலைமைத்துவமொன்று இல்லாத போது அந்த நாடும் நிறுவனமும் அழிந்து போய்விடும். இன்று இலங்கையிலும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் மேலும் பல தலைவர்களும் உள்ளனர். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும், அமைச்சர்களான ராஜித சேனாரத்னவும், மங்கள சமரவீரவும் நாட்டின் தலைவர்கள் போலத்தான் இருக்கின்றனர். மறுமுனையில் வடக்கில் விக்னேஸ்வரனும் உள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். (உ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உணவகம் மீது துப்பாக்கிச் சூடு

ஆனமடுவ ஆன்டியகம பிரதேசத்தின் உணவகமொன்றின் மீது உந்துருளியில் வந்த நபரொருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் எவருக்கும் பாதிப்புகள் ஏற்பட்டிருக்கவில்லை. இரண்டு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற தகறாரைத் தொடர்ந்தே அச்சுறுத்தும் வகையில் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. (உ)

## அந்த நாள் ஞாபகம்.....!



**29.10.1969**

உலகின் முதலாவது ஒரு கனினியில் இருந்து வேறொரு கனினிக்கான தொடுப்பு ARPANET மூலம் இணைக்கப்பட்டது

# நாடு முழுவதும் பரீட்சார்த்த அனர்த்த எச்சரிக்கை ஒலி

நாட்டில் கடற்கரையை அண்டிய 14 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 77 அனர்த்த முன்னெச்சரிக்கை கோபுரங்களில், எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சம நேரத்தில் அனர்த்த எச்சரிக்கை ஒலியெழுப்பி அனர்த்த பாதுகாப்பு தொடர்பான ஒத்திகை ஒன்றினை நடத்தவுள்ளதாக, அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.ஷியாத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் குறிப்பிட்ட அவர்,

“இதுவரை காலமும் இடம்பெற்ற அனர்த்த முன்னெச்சரிக்கை ஒத்திகையானது மாவட்டம் அல்லது குறிப்பிட்ட பிரதேசத்தை மையப்படுத்தியதாக இடம்பெற்று வந்துள்ளது.

எதிர்வரும் 05ஆம் திகதி இடம்பெறவுள்ள ஒத்திகையானது, கரையோர 14 மாவட்டகளிலும் 77 அனர்த்த முன்னெச்சரிக்கை கோபுரங்களை ஒரே நேரத்தில் நடைபெறவுள்ளது. அதன் மூலம் அனர்த்த முன்னெச்சரிக்கை ஒத்திகையை மேற்கொண்டு பொதுமக்களை விழிப்பூட்டுவதற்கான வேலைத் திட்டம் ஒன்றை அனர்த்த முகாமைத்துவ அமைச்சு முன்னெடுத்து வருகின்றது” - என்றார். (உ)

# ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் இராணுவத்தை விமர்சிக்க முடியாது

கொழும்பு, ஒக்.29

‘இராணுவத்தில் சேவையாற்றிய அதிகாரி மட்டத்தைச் சேர்ந்தவர்களோ அல்லது ஏனையவர்களோ, ஓய்வு பெற்றதன் பின்னர், இராணுவத்தை விமர்சனத்துக்கு உட்படுத்த முடியாது’ என இராணுவத் தளபதி லெப்டினென்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க தெரிவித்தார்.

‘அவ்வாறான விமர்சனங்களை, பாரிய குற்றமாகவே நான் காண்கின்றேன்’ என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

‘அவ்வாறு விமர்சனத்துக்கு உட்படுத்தும், முரண்பாடுகளை, அவர்களை சேவையிலிருந்த காலத்திலேயே, தீர்த்து வைப்பதற்கு முயற்சித்திருக்க வேண்டும்’ என்றும் அவர் தெரிவித்துள்ளார். தேசிய மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு வெலிகந்த இராணுவ முகாமில், இடம்பெற்ற மரம் நடுகை வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (உ)



# வடக்கு மாகாணசபை உறுப்பினராக அப்பாஸ் நியமனம்

வடமாகாண சபையின் மன்னார் மாவட்டத்துக்கான புதிய உறுப்பினராக அப்பாஸ் அலிகான் ஷரிபு நியமிக்கப்பட்டுள்ளார் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

வட மாகாண சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மன்னார் மாவட்ட உறுப்பினர்களில் ஒருவரான ரிப்கான் பதியூதீன் பதவி விலகியதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்துக்கான அதிசிறப்பு வர்த்தமானி அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளது. (உ)

# கழிவுகள் கொட்ட ஏற்பாடுகள் இல்லை




கழிவுகளைக் கொட்டுவதற்கு வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையினர் போதியளவு ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கவில்லை என பொது மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். நெல்லியடி பிரதேசம் உள்ளிட்ட இடங்களில் பொது இடங்களில் குப்பைகள் கொட்டப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ள அவர்கள் இதனால் சுகாதார சீர்கேடுகள் இடம்பெறுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர். (உ–11)

# மகிந்த நேற்று இந்தியா பயணம்




இரண்டு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு, முன்னாள் ஜனாதிபதியும், குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ச நேற்று இந்தியாவுக்குப் பயணமாகியுள்ளார்.

அவர், மஹாராஷ்ட மாநிலத்தில், ஆருங்காபாத் நகரத்தில், இரண்டாவது தடவையாகவும் எதிர்வரும் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் இடம்பெற்றவுள்ள சர்வதேச பௌத்த சம்மேளத்தில், பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன், நாடாளுமன்ற உறுப்பினர் லொஹான் ரத்வத்த, பொதுஜன முன்னணியின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் அந்தரங்க செயலாளர் உதித லொக்குபண்டார ஆகியோரும் சென்றுள்ளனர். (உ)

# குடும்பஸ்தரை காணவில்லை



மாந்தை, ஒக்.29

மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆண்டாங்குளம் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கடந்த 25ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக, அவரது மனைவி அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஆண்டாங்குளம் சந்தியில் முடி திருத்தகத்தை நடத்தி வரும் சன் நீக்கிலாஸ் (குணபால்) என்பவரே, இவ்வாறு காணாமல் போயுள்ளதாக ,அவரது மனைவி அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இவர் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் 076-8400 798, மற்றும் 076-7480357 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (உ)

# மாவட்ட ரீதியில் அடையாள அட்டை

2018 நவம்பர் மாதமளவில் மாவட்ட ரீதியில் இலத்திரனியல் அடையாள அட்டையை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஆட்பதிவு திணைக்களத்தினால் இலத்திரனியல் ஸ்மார்ட் என்ற புதிய தேசிய அடையாள அட்டை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஆட்பதிவுத் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இநத நிகழ்வில் பிரதம அதிதியாக வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சர் எஸ்.பி.நாவின்ன கலந்துகொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

வவுனியாவுக்குச் சென்ற போது அங்குள்ள மக்கள் அடையாள அட்டை பெறுவதில் அதிக சிக்கல்களை எதிர்கொண்டு வருவதை காண முடிந்ததாக குறிப்பிட்ட அமைச்சர் , அதனால் நாம் ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகத்துடன் பேச்சு நடத்தினோம். இந்தப் பணி கடினமானது.

இருப்பினும் 2018 நவம்பர் மாதமளவில் அவசியம் மாவட்ட ரீதியில் இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்க வேண்டும் என நான் ஆலோசனை வழங்கியுள்ளேன் என்றும் தெரிவித்தார். (உ)

# ஹெரோயினுடன் பாகிஸ்தானியர் கைது

15 மில்லியன் ரூபா பெறுமதியான, 1.6 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த ஒருவரே வெள்ளவத்தை பகுதியில் வைத்து இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார். (உ)

# பொருளாதார முகாமைத்துவம் மிகவும் கீழ் நிலையில



நிகழ்காலத்தில் நாட்டின் பொருளாதார முகாமைத்துவம் மிகவும் கீழ் மட்டத்துக்கு வீழ்ச்சியடைந்திருப்பதாக கலாநிதி [illegible] தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக நாட்டின் பல்வேறு செயற்பாடுகள் முடங்கிக் கிடப்பாதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டின் பொருளாதார நிலமைகள் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு [illegible] அவர் இதனைக் கூறினார். நாட்டின் [illegible] நிலமையை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களுக்கு போதை மாத்திரை விற்றவர் கைது

கொழும்பு, ஒக்.29

மாணவர்களுக்கு போதை மாத்திரைகள் விற்பனை செய்த ஒருவரை கிண்ணியாவில் பொலிஸார் கைது செய்துள்ளனர். அதே இடத்தைச் சேர்ந்த 32 வயதான குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

கிண்ணியாவில் பிரபல பாடசாலை ஒன்றின் முன்பாக சைக்கிள் ஒன்றில் வைத்து போதை மாத்திரைகளை விற்பனை செய்து கொண்டிருந்த போதே பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

கைதான நபரிடம் இருந்து மூன்று வகையான போதை மாத்திரைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். அவரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத் துள்ளனர்.

# இலங்கை – பாகிஸ்தான் இறுதியாட்டம் பாதுகாப்புக்கு ஆயுதம் ஏந்திய இராணுவம்



இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியுமான மற்றும் மூன்றாவது ருவென்ரி - 20 போட்டி இன்று நடைபெறவுள்ளது. பாகஸ்தானின் கடாபி மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டிக்காக ஆயுதம் ஏந்திய இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு பாகிஸ்தான் சென்ற இலங்கை அணியினர் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து அங்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் செல்ல ஏனைய அணிகள் மறுத்து விட்டன.

இந்நிலையில் அங்கு செல்ல இம்முறை இலங்கை அணி சம்மதித்தது. எனவே இந்தப் போட்டியை சிறப்பாக நடத்தி ஏனைய அணிகளை தங்கள் நாட்டுக்கு வரவழைத்து விளையாட வேண்டும் என்பதில் பாகிஸ்தான் முனைப்பாக உள்ளது.

இதனால் போட்டி நடக்கும் கடாபி மைதானத்தின் பாதுகாப்பைப் பன்மடங்கு அதிகரித்து, ஆயுதம் ஏந்திய இராணுவத்தினரைப் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தியுள்ளது. (உ)

## மனைவியை மீட்டுத் தாருங்கள் கணவன் பொலிஸில் முறைப்பாடு

வவுனியா, ஒக்.29

உறவினர்களால் பிரித்துக் கொண்டுசெல் லப்பட்ட தனது மனைவியை கண்டுபிடித் துத் தருமாறு பொலிஸ் நிலையத்தில் அவரின் கணவர் முறைப்பாடு செய்துள்ளார்.

வவுனியா கோவில்குளத்தை சேர்ந்த ச.பிரதாபன் (வயது 24) என்பவரே இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

பிரதாபன் வவுனியா பசார் வீதியில் உள்ள வியாபார நிலையம் ஒன்றில் பணியாற்றி வந்துள்ளார். இந்நிலையில் அவரும், அந்த நிலையத்தின் உரிமையா ளரின் மகளான பி.ரிமாசாவும் (வயது 18) காதலித்து வந்துள்ளனர்.

இருவரின் காதலும் அவர்களின் பெற்றோருக்கு தெரியவே பெண்ணுக்கு வேறொருவரை திருமணம் செய்து வைக்க முடிவு செய்தனர். இதனிடையே இரு வரும் வீட்டை விட்டு வெளியேறி திருமணம் செய்துள்ளனர்.

இவர்களை கண்டுபிடித்த பெண்ணின் பெற்றோர், தங்களின் மதப்படி திருமணம் செய்து வைப்பதாகக் கூறி அழைத்துச் சென்று, அவரைத் தாக்கியுள்ளனர். அத்துடன் அவரின் சம்மதமின்றி வலுக் கட்டாயமாக தங்கள் மதச் சடங்கை நிறைவேற்றியுள்ளனர்.

இதனிடையே அவரின் மனைவியை கூட்டிச் சென்று ஒளித்து வைத்துள்ளனர். இதனால் உடலாலும் மனதாலும் தான் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறி தனது மணைவியை கண்டுபிடித்துத் தருமாறு வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய் துள்ளார். (உ)

## கைபேசி வாங்கியவர் மறியலில்

திருகோணமலை, ஒக்.29

வீட்டுக்குள் நுழைந்து இரண்டு பவுண் சங்கிலியை களவாடி விற்று கைபேசி வாங் கிய இளைஞரை விளக்கமறியலில் வைக்க கந்தளாய் நீதிவான் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

திருகோணமலை அப்போபுர பொலிஸ் பிரிவில் தல்கஸ்வெவ இடத்தைச் சேர்ந்த 19 வயது இளைஞர் ஒருவர் தன் அயல் வீட்டில் நுழைந்து இரண்டு பவுண் சங்கிலியை களவாடியுள்ளார்.

பின்னர் அதனை 30 ஆயிரம் ரூபாவுக்கு விற்றுவிட்டு கைபேசி ஒன்றை வாங்கி யுள்ளார். இது குறித்து சங்கிலியின் உரிமையாளர் கொடுத்த முறைப் பாட்டின் அடிப்படையில் குறித்த இளை ஞர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதையடுத்தே அவரை இரு வாரம் விளக்க மறியலில் வைக் குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## தொடர்ச்சிகள்

### கண்ணில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றப்பட்டனர். அங்கு அவர்களுக்கு மீள வும்சத்திரசிகிச்சைமேற்கொள்ளப்பட்டது.

எனினும் இவர்களில் ஒருவர் தனது பார் வையை முற்றாக இழந்து விட்டார் என்றும் அவரின் கண்ணை அகற்ற வேண்டியிருக் கும் எனவும் மருத்துவர்கள் எச்சரித்துள் ளனர். அத்துடன் இன்னும் ஒருவரின் கண் ணிலும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட நால்வருக்கும் மீளவும் சத்திர சிகிச்சை செய்யப்பட்டு அவர் கள் முழுமையாகக் குணமடைந்து வருகின் றனர் எனக் கூறப்படுகின்றது. (உ)

### கொலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளனர்.

இந்தக காணொலியை ஆதாரமாகக் கொண்டு பண்ணைப் பகுதியில் இராணுவ முகாமில் நின்றிருந்த, ஓட்டோவையும் மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். விரைவில் கொலை சூத்திரதாரிகள் கைது செய்யப்படுவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (உ)

### ஸ்ரீலங்கா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுபோல் இதுவும் ஏற்பட்டு விடக் கூடாது.

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் பல கட்சிகள் களமிறங்கவுள்ளன. ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் தனித்துக் களமிறங்கி னால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குப் பாதிப்பு எதுவும் இல்லை. ஆனால் அவர் கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த வர்களே. இதனால் அவர்கள் எம்முடன் இணைந்தே தேர்தலை எதிர்கொள்வர். அதற்கான முயற்சிகளே தற்போது நடை பெறுகின்றன எனவும் இதன்போது அமைச்சர் கூறினார்.


உங்கள் துயரில் பங்கெடுக்கவும்,
உறவுகளுக்கு அறிவிக்கவும்

- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி Ethiroli

021 3004848

நிபந்தனை களுக்குட்பட்டது


## மரண அறிவித்தல்



### வேலாயுதம் செல்வராஜா

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோத்தர்)

வீமன்காமம் பளையைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் செல்வராஜா கடந்த 25.10.2017 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்- வள்ளி யம்மை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்க ளான சபாபதி - பூமணி தம்பதியரின் அருமை மருமகனும், ரஞ்சிதாதேவியின் (CWEயாழ்நகர்) பிரியமான துணைவரும் தனுஜன் (பிரான்ஸ்), தர்ஷன் (பிரான்ஸ்), மறைந்த தார்மீகன், நாகதீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்ஷன் சஷ்ரிகாவின் (பிரான்ஸ்) அன்பு மாமனாரும் அஸ்மிக் காவின் (பிரான்ஸ்) இனிய அப்பப்பாவும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, இரத்தினசிங்கம், நவமணி, செல்வநாயகம், செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோ தரனும், சபா. புஷ்பநாதன் (துர்க்கா புத்தகச்சோலை), புஷ்பதேவி, ஜெகத்நாதன் (சாயி புக்சொப், கொழும்பு), Dr.ரேணுகாதேவி, செல்வநாதன் (டென்மார்க்), சபாநாதன் (ஜேர்மனி), மறைந்த சத்தியநாதன், சற்குணநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(29.10.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்று,பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

36, தோம்பை வீதி, சுன்னாகம்.
தொ.பே.: 0776267538, 021 224 2588

**தகவல்:**
மனைவி, பிள்ளைகள், மருமகள், பேரப்பிள்ளை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நயனுக்கு இரகசிய திருமணம்



சென்னை.ஒக்.29

நடிகை நயன்தாராவும் விக்னேஷ் சிவனும் விரைவில் இரகசியத் திருமணம் செய்யத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

தற்போதுள்ள முன்னணி நடிகைகளில் ஒருவர் நயன்தாரா. நானும் ரவுடி தான் படத்தில் நடிக்கும் போது, இவருக்கும் அப்படத்தின் இயக்குனர் விக்னேஷ் சிவனுக்கும் காதல் ஏற்பட்டது. இதன்பின் விக்னேஷ் சிவன் பிறந்தநாளை வெளிநாட்டில் பிரமாண்டமாகக் கொண்டாடினார்.

அவருக்கு நயன்தாரா சொகுசுக் காரைப் பரிசளித்தார். இதையடுத்து ஜோடியாக வலம் வரும் இவர்கள் இருவரும் இரகசியமாகத் திருமணம் செய்ய முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. தவிர, இதை உறுதி செய்யும் விதமாகச் சென்னையில் பங்களா ஒன்றை இந்த ஜோடி வாங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது. (கு)

# வடகொரியாவின் வதை முகாம்

வடகொரியா,ஒக்.29

வடகொரியாவில் கிம் ஜோங் வுன் ஆட்சிக்கு வந்த பின்னரும் அதற்கு முன்னரும் செயல்பட்டு வந்த இரகசியச் சித்திரவதை முகாம் மற்றும் இரகசியச் சிறைச்சாலை தொடர்பில் இதுவரை வெளிவராத 20 புகைப்படங்கள் சமூக ஆர்வலர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த புகைப்படங்களில் உள்ள சித்திரவதை முகாம் தொடர்பில் ஆய்வு மேற்கொண்ட அதிகாரிகள், சித்திரவதை முகாம்களைப் பயம் மற்றும் கட்டுப்பாடுகளுக்கான கருவிகள் என வடகொரியா விளக்கமளித்துள்ளதாகவும், இங்கு துன்பம் என்பது கிட்டத்தட்ட கற்பனைக்கு எட்டாதது எனவும் தெரிவித்துள்ளனர்.

வடகொரியாவின் அன்.ஜென்.பூ சிறைச்சாலை என்ற தலைப்பில் வெளியாகியுள்ள ஆய்வறிக்கையானது கிம் ஜோங் வுன் ஆட்சியில் இதுவரை நடைபெற்ற கொடூர நிகழ்வுகளின் தொகுப்பாக அமைந்துள்ளது என ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதியுடன் வார்த்தைப் போரில் ஈடுப்பட்டு வரும் வடகொரியா, சிறைச்சாலைகளில் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கும் மனித உரிமை மீறல்களை மூடி மறைப்பதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளது.

வடகொரியாவின் புறநகர்ப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இதுபோன்ற வதை முகாம்களில் ஜேர்மனியின் நாஜி முகாம்களை விடவும் கொடூர தண்டனைகள் வழங்கப்பட்டு வருவதாகவும், மனிதத்தன்மையை இழக்கச் செய்யும் மருத்துவமுறைகளும் பயன்படுத்தப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. (கு)

# சிரித்தால் மட்டும் முகம் காட்டும் கண்ணாடி



துருக்கி,ஒக்.29

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, புற்றுநோயாளிகளுக்காகவே ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியை உருவாக்கியிருக்கிறார் துருக்கியைச் சேர்ந்த பெர்க் இல்ஹான். லப்டொப் போலவே இருக்கும் இந்தக் கருவியில் கண்ணாடியும் கேமராவும் பொருத்தப்பட்டிருக்கின்றன.

முக உணர்ச்சிகளைக் கண்காணித்துக் கொண்டிருக்கும். சிரித்தவுடன் சட்டென்று கண்ணாடியில் முகத்தைக் காட்டும். சிரிக்கவில்லை என்றால் கண்ணாடியில் முகம் தெரியாது. வழக்கமான கண்ணாடி போலவே சுவரில் மாட்டலாம், மேஜையில் வைக்கலாம். ரூ.1.2 லட்சத்திலிருந்து ரூ.1.94 லட்சம் வரை பல விதங்களில் இந்தக் கண்ணாடிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. (கு)

# களத்தில் இறங்கினார் கமல்



சென்னை,ஒக்.29

கொசஸ்தலை ஆற்றில் சாம்பல் கழிவுகள் கொட்டப்படுவதாகப் புகார் தெரிவித்த நடிகர் கமல் ஹாசன் நேற்று துறைமுகக் கழிமுகப் பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டார்.

அரசியலில் களமிறங்கப் போவதாகக் கூறி வரும் நடிகர் கமல் ஹாசன், தொடர்ந்து அரசியல் கருத்துக்களைப் பதிவிட்டு வருகிறார். ஆட்சியாளர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டி வரும் அவர், நேற்று முன்தினம் தனது டுவிட்டர் பதிவில் வடசென்னைக்கு வரக்கூடிய ஆபத்துக் குறித்துப் பொதுமக்களுக்கு விளக்கியிருந்தார்.

'தவறு நடந்த பின் அரசை விமர்சிக்காமல் இதோ வருமுன் காக்க ஒரு வாய்ப்பு. எண்ணூர் கழிமுகத்தை உதாசீனித்தால் வடசென்னைக்கு ஆபத்து. கொசஸ்தலை ஆற்றில் வல்லூர் மற்றும் வடசென்னை அனல் மின் நிலையங்கள் சாம்பல் கழிவுகளை கொட்டுகின்றன' எனப் புகார் கூறியிருந்தார்.

இந்நிலையில், நடிகர் கமல் ஹாசன் நேற்று நேரடியாகக் களத்தில் இறங்கியுள்ளார். எண்ணூர் துறைமுகக் கழிமுகம், சாம்பல் குளம் உள்ளிட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்ட கமல், அப்பகுதி மக்களைச் சந்தித்தும் பேசினார்.

அப்போது, சாம்பல் கழிவுகள் கொட்டப்படுவதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மக்களிடம் கேட்டறிந்தார். மக்கள் பிரச்சினைகளுக்காக டுவிட்டரில் மட்டுமே இதுவரை தனது கருத்துக்களை பதிவிட்டு வந்த கமல், முதல் முறையாகக் களத்தில் இறங்கி மக்களைச் சந்தித்துள்ளார். (கு)

# இறுதிக் கட்டத்தில் 'வேலைக்காரன்'



சென்னை, ஒக்.29

மோகன் ராஜா இயக்கத்தில் சிவகார்த்திகேயன் - நயன்தாரா நடிப்பில் உருவாகி வரும் "வேலைக்காரன்" படம் கடைசிக் கட்டத்தை நெருங்கி இருக்கிறது. ஏ.எம். ஸ்டுடியோஸ் சார்பில் ஆர்.டி.ராஜா தயாரிக்கும் இந்த படத்தின் மூலம் மலையாள நடிகர் பகத் பாஷில் தமிழில் அறிமுகமாகிறார்.பிரகாஷ் ராஜ், சினேகா, ரோகினி, ஆர்.ஜே.பாலாஜி, தம்பி ராமையா, சதீஷ், ரோபோ சங்கர், விஜய் வசந்த் உள்ளிட்ட பலரும் நடித்திருக்கும் இப்படத்துக்கு அனிருத் இசையமைத்திருக்கிறார். பாடல்கள் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்பட்டு வரும் நிலையில், படத்தில் இருந்து ஒரு பாடல் மட்டும் வெளியாகி இருக்கிறது. இரண்டாவது பாடல் நவம்பர் 2 ஆம் திகதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சமூகப் பிரச்சனையை மையமாக வைத்து ஆக்‌ஷன் படமாக உருவாகியிருக்கும் இந்தப் படம் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் 22 ஆம் திகதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# எகிப்தில் 12 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

எகிப்து,ஒக்.29

எகிப்து நாட்டில் மேற்குப் பாலைவனப் பகுதியில் பதுங்கியிருந்த தீவிரவாதிகளைக் குறிவைத்துப் பாதுகாப்புப் படையினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இதில் 12 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

எகிப்து நாட்டில் இயங்கி வருகிற மத அடிப்படையிலான தீவிரவாதிகள், இராணுவ வீரர்கள் மீது எகிப்து தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றது. கடந்த வாரம், கெய்ரோ நகருக்குத் தென்மேற்கில் பஹாரியா பாலைவனச்சோலை அருகே தீவிரவாதிகளைத் தேடும் வேட்டையில் பொலிஸாரும், பாதுகாப்புப் படையினரும் கூட்டாக ஈடுபட்டனர். அப்போது தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பொலிஸார், பாதுகாப்புப் படையினர் 53 பேர் கொல்லப்பட்டனர். எகிப்தில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்திய இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, அங்கு தீவிரவாதிகள் மீது இராணுவம் அதிரடி நடவடிக்கையை முடுக்கி விட்டுள்ளது. இந்த நிலையில், மேற்குப் பாலைவனப் பகுதியில் பதுங்கியிருந்த தீவிரவாதிகளைக் குறிவைத்துப் பாதுகாப்புப் படையினர் அதிரடி நடவடிக்கையில் இறங்கினர். இதில் 12 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். (கு)



# மடிக்க கூடிய ரப் விரைவில் வெளியீடு

வொஷிங்டன்,ஒக்.29

முன்னணி ஸ்மார்ட்போன் நிறுவனங்கள் மடிக்கக்கூடிய ஸ்மார்ட்போன்களை உருவாக்கி வருவதாகக் கூறப்படும் நிலையில், மடிக்கும் திறன் கொண்ட ரப் சாதனத்தை மைக்ரோசாப்ட் உருவாக்கி வருவதாகக் கூறப்படுகிறது.

மைக்ரோசாப்ட் நிறுவனம் கொரியர் என்ற பெயரில் மடிக்கக்கூடிய டேப்லெட் சாதனம் ஒன்றை உருவாக்கி வருவதாக ஏற்கெனவே தகவல்கள் வெளியானது. கான்செப்ட் வடிவில் உருவான இந்தச் சாதனம், பல ஆண்டுகள் இடைவெளிக்குப் பின் மீண்டும் உயிர் பெறலாம் எனக் கூறப்படுகிறது.



இம்முறை வெளியாகியுள்ள தகவல்களில் மைக்ரோசாப்ட் நிறுவனம் கொரியர் போன்று காட்சியளிக்கும் மடிக்கக்கூடிய ரப் சாதனத்தை உருவாக்கி வருவதாகவும், இந்தச் சாதனம் அடுத்த ஆண்டு வாக்கில் அறிமுகம் செய்யப்படலாம் எனக் கூறப்படுகிறது. (கு)

# டிரம்ப்-ரஷ்யா விசாரணை முதல் குற்றச்சாட்டு பதிவு

ரஷ்யா,ஒக்.29

கடந்த ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு இருந்ததாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டை விசாரித்து வரும் சிறப்பு ஆலோசகர் ராபர்ட் முல்லர் தலைமையிலான விசாரணைக் குழு முதல் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்துள்ளதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. குற்றச்சாட்டுகள் என்ன என்பதோ, யார் யார் மீது என்பதோ தெளிவாகத் தெரியவில்லை என்று சி என் என் மற்றும் ராய்ட்டர்ஸ் நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குற்றம் சுமத்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் திங்கள் கிழமைக்குள் காவலில் எடுக்கப்படலாம் என்று சி என் என் தெரிவித்துள்ளது.

அதிபர் தேர்தலில் டொனால்ட் டிரம்ப் வெற்றி பெற ரஷ்ய அரசாங்கம் உதவியதாக இந்த ஆண்டு தொடக்கத்தில் அமெரிக்க உளவு அமைப்புகள் தெரிவித்திருந்தன. டொனால்ட் டிரம்பின் போட்டியாளரான ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஹிலரி கிளின்டனைச் சிறுமைப்படுத்த அவருடைய இமெயில் கணக்குகளை ஊடுருவியும், ஹிலரியை கேலி செய்து சமூக வலைத்தளங்களில் மோசமான கருத்துக்களை பதியவும் ஒரு பிரச்சாரத்தை ரஷ்யா முன்னின்று நடத்தியதாகக் உளவுத்துறை அமைப்புகள் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli

# புதிய அரசியலமைப்பு நிறைவேறினால் ஆயுதம் ஏந்திப் போராட நேரிடும்

## கொக்கரிக்கிறது கிழக்கு சிங்கள அமைப்பு

மட்டக்களப்பு, ஒக்.29

புதிய அரசியலமைப்பு நிறைவேறினால் கிழக்கு மக்கள் ஆயுதம் ஏந்தும் நிலை ஏற்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி கட்சியின் ஆதரவில் நேற்று நடத்தப்பட்ட போராட்டத்தில் பங்கேற்ற "கிழக்கு பொது மக்கள்" என்ற அமைப்பே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுரம் அருகே நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் தேசிய சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜேசேகர தலைமையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

"புதிய அரசமைப்பின் மூலம் வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் ஏற்பாடுகள் நடக்கின்றன. அது நாட்டைப் பிரிவினைவாதம் நோக்கி நகர்த்திவிடும். வடக்கையும் கிழக்கையும் இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் நாம் ஆயுதம் ஏந்திப் போரிட நேரிடும்." என ஜயந்த விஜேசேகர இதன்போது குறிப்பிட்டார்.


# கடும் மழை இன்று நீடிக்கும்

யாழ்ப்பாணம், ஒக்.29

நாட்டின் பல பகுதிகளிலும் இன்று கடும் மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை காரணமாக இன்றும் அடுத்து வரும் சில தினங்களில் இந்த கால நிலை நீடிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல பாகங்களிலும் இன்று மாலை மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும், எனவும் சில பிரதேசங்களில் 100 மி.மீ. வரையிலான மழை வீழ்ச்சி கிடைக்கக் கூடும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. (உ)




# துவாயுடனே பயணிப்பேன் அடங்க மறுத்த இளைஞர்

## விரட்டி விட்ட பயணிகள்

கொழும்பு, ஒக்.29

துவாயை மாத்திரம் அணிந்து கொண்டு பஸ்ஸில் பயணிக்க அடம் பிடித்த இளைஞரால் நுகேகொட பிரதேசத்தில் பரபரப்பு ஏற்பட்டது.




நேற்றைய தினம் நுகேகொட பாலத்திற்கு அருகே உள்ள பேருந்து தரிப்பிடத்தில் துவாய் மாத்திரம் அணிந்து பஸ்ஸில் பயணிப்பதற்காக இளைஞர் ஒருவர் சென்றுள்ளார்.

துவாயுடன் வந்த இளைஞர் தரித்து நின்ற பஸ்ஸில் ஏறியதும், அவரைக் கீழே இறங்குமாறு இளைஞர்கள் கூறினர். ஆனால் அந்த இளைஞர் அதை பொருட்படுத்தவில்லை. பெண்கள், சிறுவர்கள் பேருந்தில் இருப்பதால் அவ்வாறு பயணிக்க முடியாது என இளைஞருக்குக் கூறப்பட்டது.

அதை ஏற்க இவர் மறுத்த இளைஞர் " நான் விரும்பியவாறு வீதியில் நடந்து செல்வதற்கான உரிமை எனக்குள்ளது. உடம்பின் மேல் பகுதிக்கு ஆடை இல்லாமல் செல்வதால் யாருக்கும் பாதிப்பு ஏற்படப் போவதில்லை. என் உடல் அழகானது. அதை மூடி மறைக்க வேண்டிய அவசியம் இல்லை" என வாதிட்டுள்ளார்.

எனினும் அந்த இளைஞருக்கு எதிராக கடும் எதிர்ப்புக் கிளம்பவே இறுதியில் பஸ்ஸை விட்டு இறங்கிச் சென்றுள்ளார். (உ)

### அகதி முகாமுக்குள் அனுமதிக்கக் கோரி

# கழுத்தைக் கீறிய இலங்கை இளைஞன்

சென்னை, ஒக்.29

அகதி முகாமுக்குள் அனுமதிக்கக் கோரி தனக்குத் தானே கழுத்திலும், கைகளிலும் கீறிய இலங்கை இளைஞரின் செயல் தமிழகத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையை சேர்ந்த அஜய் (வயது 24) என்ற இளைஞரே இந்தச் செயலைச் செய்துள்ளார். இந்த இளைஞர் கடந்த 2015 ஆம் ஆண்டு கொழும்பில் இருந்து தனுஷ்கோடிக்கு களவாக சென்றுள்ளார். அதற்காக தண்டிக்கப்பட்டு பின்னர், அவரின் அகதிக் கோரிக்கையை ஏற்று மண்டபம் அகதி முகாமில் வசிக்க அனுமதிக்கப்பட்டார்.

ஆனால், கடந்த மார்ச் மாதம் எவருக்கும் தெரியாமல் வெளியேறிச் சென்ற அஜய், நேற்று மண்டபம் அகதி முகாமுக்குச் சென்றுள்ளார். ஆனால், அவரை அதிகாரிகள் உள்ளே அனுமதிக்கவில்லை.

இதனால் அவர்களுடன் முரண்பட்ட இளைஞர், திடீரென கண்ணாடித் துண்டுகளால் தனது கழுத்து, கைகளை கீறியுள்ளார். அவரைக் காப்பாற்றிய பொலிஸார் உடனடியாக வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். (உ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 29.10.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.